# இயல் 4 .1 மூதுரை

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **மாணவர்கள் நூல்களை ________ க் கற்க வவண்டும்.**

    A. மேலோட்டமாக

    B. மாசற

    C. மாசுற

    D. மயக்கமுற

விடை : மாசற

2. **இடமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது**

    A. இடம் + மெல்லாம்

    B. இடம் + எல்லாம்

    C. இட + எல்லாம்

    D. இட + மெல்லாம்

விடை : இடம் + எல்லாம்

3. **மாசற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது**

    A. மாச + அற

    B. மாசு + அற

    C. மாச + உற

    D. மாசு + உற

விடை : மாசு + அற

4. **குற்றம் + இல்லாதவர் என்னும் சொல்லைப் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்**

    A. குற்றமில்லாதவர்

    B. குற்றம்இல்லாதவர்

    C. குற்றமல்லாதவர்

    D. குற்றம் அல்லாதவர்

விடை : குற்றமில்லாதவர்

5. **சிறப்பு + உடையார் என்னும் சொல்லைப் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்**

    A. சிறப்புஉடையார்

    B. சிறப்புடையார்

C. சிறப்படையார்

D. சிறப்பிடையார்

விடை : சிறப்புடையார்

II. குறுவினா

**1. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?**

**விடை:** மன்னனையும், குறையில்லாமல் கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் மன்னனை விடக் கற்றவரே சிறந்தவர். மன்னனுக்குத் தன் நாட்டில் மட்டுமே சிறப்பு. ஆனால் கற்றவருக்கு சென்ற இடெமல்லாம் சிறப்பு.

2. **"மூதுரை" என்னும் சொல்லின் பொருள் யாது?**

விடை : "மூதுரை" என்னும் சொல்லின் பொருள் "மூத்தோர் கூறும் அறிவுரை" என்பதாகும்

2. **ஔவையார் - குறிப்பு வரைக.**

- மூதுரையின் ஆசிரியர் ஔவையார் ஆவார்
- இவர் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி என்ற நூல்களையும் இயற்றியுள்ளார்.

3. **மூதுரை - நூற்குறிப்பு வரைக .**

- மூதுரை என்ற சொல்லுக்கு மூத்தோர் கூறும் அறிவுரை என்பது பொருள் ஆகும்.
- சிறந்த அறிவுரைகளை கூறுவதால் இந்நூல் மூதுரை எனப் பெயர் பெற்றது.
- இந்த நூலில் 31 பாடல்கள் உள்ளன.